ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
**Department of Examinations, Sri Lanka**
**NATIONAL EVALUATION AND TESTING SERVICE**

පැලවත්ත, බත්තරමුල්ල.
பெலவத்தை" பத்தரமுல்ல.
**Pelawatta, Battaramulla.**

මගේ අංකය / எமது இல / My No. } 1/1/ මාධ්‍ය නිවේදන 2025

ඔබේ අංකය / உமது இல / Your No. }

දිනය / திகதி / Date } 2025.11.01

දුරකථන අංක / தொலைபேசி / **Telephone** } **2786200, 2784201, 2785202, 2784203, 2784204, 2786205, 2784206, 2787207**

ෆැක්ස් / பெக்ஸ் / Fax } **011-2785220**

තැපැල් ලිපිනය / அஞ்சல் முகவரி / POSTAL ADDRESS — තැ.පෙ. 1503 කොළඹ / த.பெ. 1503 கொழும்பு / P.O. Box 1503 Colombo

අන්තර්ජාල ලිපිනය / இணையதள முகவரி / Web Address } **www.doenets.lk** **www.results.exams.gov.lk**

e-mail: **exams@doenets.lk**

---

**සියලු ම මාධ්‍ය ආයතන ප්‍රධානීන් වෙත,**

පහත සඳහන් නිවේදනය ඔබ විද්‍යුත් / මුද්‍රිත මාධ්‍යයෙහි ප්‍රචාරය කිරීමට / පළ කිරීමට අවශ්‍ය කටයුතු සලසා දෙන ලෙස කාරුණිකව ඉල්ලා සිටිමි. මේ සම්බන්ධව ඔබ දක්වන සහයෝගය ඉතා අගය කර සලකමි.

**ඒ. කේ. එස්. ඉන්දිකා කුමාරි ලියනගේ**
විභාග කොමසාරිස් ජනරාල්

**මාධ්‍ය නිවේදනය**

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**

**අ.පො.ස. (ළ්.පෙළ) විභාගය - 2025**

**උපකාරක පන්ති පැවැත්වීම තහනම් කිරීම.**

2025 අ.පො.ස. (උ.පෙළ) විභාගය 2025 නොවැම්බර් මස 10 දින සිට දෙසැම්බර් මස 05 වන දින දක්වා විභාග මධ්‍යස්ථාන 2362 ක දී පැවැත්වීමට කටයුතු සංවිධානය කර ඇත.

1968 අංක 25 දරණ ප්‍රසිද්ධ විභාග පනතෙහි 22 වගන්තිය යටතේ නිකුත් කර ඇති නියෝග අනුව 2013.06.21 දිනැතිව නිකුත් කරන ලද අංක 1816 ගැසට් නිවේදනය ප්‍රකාරව,

- ❖ අ.පො.ස. (උ.පෙළ) - 2025 විභාගයට අදාළව 2025.11.04 දින මධ්‍යම රාත්‍රී 12.00 සිට සම්පූර්ණ විභාගය අවසන් වෙන තෙක්,
  - ➢ විභාග අපේක්ෂකයින් සඳහා උපකාරක පන්ති පැවැත්වීම සහ එම පන්ති මෙහෙයවීම
  - ➢ විෂයානුබද්ධ දේශන, සම්මන්ත්‍රණ, වැඩමුළු පැවැත්වීම
  - ➢ උක්ත විභාගය සඳහා අනුමාන ප්‍රශ්න ඇතුළත් ප්‍රශ්න පත්‍ර මුද්‍රණය කිරීම සහ ඒවා බෙදා හැරීම
  - ➢ විභාග ප්‍රශ්න පත්‍රවල ප්‍රශ්න ලබා දෙන බවට හෝ ඒ හා සමාන ප්‍රශ්න ලබා දෙන බවට පෝස්ටර්, බැනර්, අත්පත්‍රිකා විද්‍යුත් හෝ මුද්‍රිත මාධ්‍ය මගින් ප්‍රසිද්ධ කිරීම හෝ එවැනි දෑ ළඟ තබා ගැනීම සපුරා තහනම් වේ.

යම් අයෙක් හෝ ආයතනයක් හෝ වෙනත් පාර්ශවයක් මෙකී නියෝග නොසලකා ක්‍රියා කරනු ලැබුවහොත් ඒ තැනැත්තා හෝ ආයතනය හෝ එම පාර්ශවය මෙම පනත යටතේ වරදකරුවකු වේ.

කිසියම් තැනැත්තෙකු හෝ ආයතනයක් හෝ පාර්ශවයක් මෙම නියෝග යම් ආකාරයකින් කඩකිරීමක් හෝ උල්ලංඝනය කිරීමක් සිදු කළහොත් ඒ පිළිබඳව ළඟ ම පවතින පොලිස් ස්ථානය හෝ පොලිස් මූලස්ථානය හෝ ශ්‍රී ලංකා විභාග දොපර්තමේන්තුව වෙත පහත දුරකථන අංක ඔස්සේ පැමිණිලි කළ හැක.

| | |
|---|---|
| පොලිස් මූලස්ථානය | : 0112421111 |
| පොලිස් හදිසි ඇමතුම් අංකය | : 119 |
| ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ ක්ෂණික ඇමතුම් අංකය | : 1911 |
| පාසල් විභාග සංවිධාන හා ප්‍රතිඵල ශාඛාව | :011-2784208/011-2784537 |

ඒ.කේ.එස්. ඉන්දිකා කුමාරි ලියනගේ
විභාග කොමසාරිස් ජනරාල්

# ஊடக அறிவித்தல்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
## க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை – 2025

## தனியார் வகுப்புக்கள் நடாத்துவதை தடை செய்தல்

2025 க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை 2025 நவம்பர் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி வரை 2362 பரீட்சை நிலையங்களில் நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

1968ஆம் ஆண்டு 25ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டளைக்கமைவாக 2013.06.21ஆம் திகதி வெளியிடப்பட்ட 1816 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாக,

- க.பொ.த. (உ.தர) – 2025 பரீட்சை தொடர்பாக 2025.11.04 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி தொடக்கம் பரீட்சை முழுமையாக நிறைவடையும் வரை,
  - பரீட்சார்த்திகளுக்காக தனியார் வகுப்புக்களை ஏற்பாடு செய்தலும் நடாத்துதலும்
  - பாடம் தொடர்பான ஆலோசனைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடாத்துதல்
  - மேற்படி பரீட்சையின் ஊக வினாப்பத்திரங்களை அச்சிடல், அவற்றை விநியோகித்தல்
  - பரீட்சை வினாத்தாள்களிலுள்ள வினாக்களை தருவதாகவோ அல்லது அதற்குச் சமமான வினாக்களை வழங்குவதாகவோ சுவரொட்டிகள், பதாகைகள், கையேடுகள், இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் மூலம் பிரசுரித்தல், அவற்றை தம்வசம் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

யாரேனும் ஒருவரோ, நிறுவனமோ, வேறு தரப்பினரோ இக்கட்டளையை கவனத்திலெடுக்காமல் செயற்படின் அந்நபர் அல்லது அந்நிறுவனம் அல்லது அத்தரப்பினர் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாக கருதப்படுவர்.

யாரேனும் ஒருவரோ, நிறுவனமோ, தரப்பினரோ இக்கட்டளையை மீறி செயற்பட்டால் அது தொடர்பாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ பொலிஸ் தலைமையகத்திற்கோ அல்லது பரீட்சைத் திணைக்களத்திற்கோ பின்வரும் தொலைபேசி ஊடாக முறைப்பாடு செய்ய முடியும்.

| | |
|---|---|
| பொலிஸ் நிலையம் | - 0112421111 |
| பொலிஸ் அவசர அழைப்பு இல | - 119 |
| இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நேரடி அழைப்பு இல | - 1911 |
| பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை | - 0112784208/ 0112784537 |

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்